(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2(1).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 யூன் 17 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 யூலை 04, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையிலான நான்காம் கட்டத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்திற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புதிய தேசிய விவசாயக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி புதிய தேசிய விவசாயக் கொள்கை தயாரிப்பு நடவடிக்கையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) அது தயாரித்து முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் அரச மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மருத்துவமனையிலும் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அப் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்;

(iii) இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவர்கள் மற்றும் இருதய நோயாளிகள் தொடர்பில் காணப்படும் மருத்துவர்-நோயாளி விகிதம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2021.12.31 ஆம் திகதியில் இருதய அறுவை சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் இருந்த நோயாளிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இருதய நோய்களால் ஆண்டொன்றில் மரணமடையும் நோயாளிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

39/2022

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனங்களைத் தெரிவு செய்யும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் அறவிடப்படும் தொகை தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) லொத்தர் சீட்டுக்களை அச்சிடும்போது, 2014.12.31ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நிறுவனம் / நிறுவனங்களது விலைகள் மூலம் பாரியளவு நிதி முறைகேடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

43/2022

கௌரவ புத்திக பத்திறண,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 186 பன்குடாவெளி கிராம அலுவலர் பிரிவில், இலுப்பச்சேனை கிராமத்தில், முருகன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழங்கால இடிபாடுகள் கொண்ட இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

44/2022

கௌரவ புத்திக பத்திறண,— மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் முழு இலங்கையையும் உள்வாங்கும் வகையில் இடம்பெற்ற மின் செயலிழப்புகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின் செயலிழப்புக்கும் ஏதுவான பிரதான காரணங்கள் தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி மின் செயலிழப்புகளை வழமைக்குக் கொண்டுவருவதற்காக செலவிடப்பட்ட தொகை மேற்கூறப்பட்ட ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின் செயலிழப்புகளை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

45/2022

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் சந்தைக்கும் கல்வி முறைமைகளுக்கும் இடையிலான பொருத்தமின்மை காரணமாக இலங்கையில் தொழிலின்மை வீதம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் கல்விசார் கற்கைகளுக்கான பாடநெறிகள் தொழில் நோக்கிலான பாடநெறிகளாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதையும்;

(iii) கல்விசார் கற்கைகளும் தொழில்சார் கற்கைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி விடயங்கள் தொடர்பாக தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் கல்விசார் கற்கைகளுக்கான பாடநெறிகளை தொழில் நோக்கிலான பாடநெறிகளாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

(v) அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பழம்பெரும் நடிகர் திரு. சௌமிய லியனகே அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

257/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட இலங்கை முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) அமைதி காக்கும் படைக்கு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரை தேவையென பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பரிந்துரைகளை வழங்குவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தடைநீக்க அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் தடைநீக்க அறிக்கைகள் வழங்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(v) 2018 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 400 கோப்புகளில், இற்றைவரை 07 தடைநீக்க அறிக்கைகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி அமைதி காக்கும் படையின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

258/2022

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அண்மித்த ஐந்து கல்வியாண்டுகளில் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு மஹபொல புலமைப்பரிசில் பெறுபவருக்கும் தற்போது செலுத்தப்படும் மாதாந்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தகுதியின் அடிப்படையில் மஹபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஐந்து கல்வி ஆண்டுகளில் உயிரியல், கணிதம், வணிகம் மற்றும் கலைப் பிரிவுகளுக்காக தகுதியின் அடிப்படையில் மஹபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

259/2022

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் நிகழ்கின்ற சுற்றாடல் மாசுபாட்டுடன் சம்பந்தப்பட்டதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) முறைப்பாட்டு வகைப்படுத்தலுக்கமைய, அத்தகைய முறைப்பாடுகளில் எவ்வகை முறைப்பாடுகள் அதிகம் கிடைத்துள்ளன என்பதையும்;

(iii) மேற்படி (i)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அம்முறைப்பாடுகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முழுமையான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந் நிறுவனங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரபையின் சட்ட விதிகளுக்கு அமைவாக செயலாற்றி உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாநகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாடு குறித்து ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தண்ணீரில் பார உலோகங்கள் கலப்பு, வளி மாசுபாடு மற்றும் ஒலி மாசுபாடு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய பரிசோதனைகளின்படி எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை என்பதையும்;

(iv) தேசிய சூழல் சட்டத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டுள்ளதன் காரணமாக, தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

569/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிராமிய மூலதன வங்கி என்ற பெயரில் வங்கி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்தையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியினால் இவ்வங்கி ஒழுங்குறுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

574/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் காணி வங்கியொன்றைத் தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தாபிக்கும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கைக்கு உரித்தான வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பிலிருந்து உச்சளவான பயனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

577/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பசளையின் அளவு ஒவ்வொரு பசளை வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பசளையை இறக்குமதி செய்த கம்பனிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் பசளை இறக்குமதிக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறைந்த தரங்கொண்ட பசளையை இறக்குமதி செய்ததாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கம்பனிகளுக்கு எதிராக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

578/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கையில் யூரியா உரத்தினை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1022/2022

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பத்திக் கைத்தொழில் உள்நாட்டுக் கைத்தொழிலாக இலங்கையில் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இன்றளவில் பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) பத்திக் உற்பத்தியில் மேற்படி தொழில்முயற்சியாளர்கள் பழைய செயன்முறை களையும் வடிவமைப்புகளையுமே பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நவீன வடிவமைப்பின் பிரகாரம் பத்திக் உற்பத்தி செய்வதற்கு வழிகாட்டும் வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1023/2022

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் பயிலிளவல் படைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இப் பாடசாலைகளின் எண்ணிக்கை போதியளவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பயிலிளவல் படைப் பயிற்சியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள பாடசாலைகள் காணப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதில் காணப்படுகின்ற இடையூறுகள் அடையாளங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்குத் தேவையான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கி பாடசாலை மாணவர்களுக்கு பயிலிளவல் படைப் பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1030/2022

கௌரவ சாந்த பண்டார,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டும் என்பதையும்;

(ii) அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு தேசிய மரபுரிமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தின் 04 பழைய இராசதானிகள் அமைந்துள்ள இடங்களின் பால் சுற்றுப்பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தம்பதெனிய ரஜமஹா விஹாரை மற்றும் இராசதானி என்பவை சுற்றுலா வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1181/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வறுமை நிலை சதவீதமாக யாது என்பதையும்;

(ii) சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறையியல் யாது என்பதையும்;

(iii) சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகைமைபெறும் ஆகக் குறைந்த வருமான மட்டம் யாது என்பதையும்;

(iv) தற்போதுள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு சமுர்த்தி நிவாரண உதவியின் பெறுமதியின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(v) சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

(vi) மரணம், வருமானம் அதிகரித்தல் மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் வருடாந்தம் சமுர்த்தி திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்ற சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி நிவாரணம் கிடைக்க வேண்டுமாயினும் இன்றளவில் சமுர்த்தி நிவாரணம் கிடைக்காதுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1183/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த அரிசித் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அதில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் நெல் அறுவடை எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(ii) மேற்படி நெல் அறுவடை அரிசியாக மாற்றப்பட்ட பின்னர் அதன் அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டின் மிகை அரிசி உற்பத்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நெல் அறுவடையும் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவும் ஒவ்வொரு வருடத்துக்கமைய மெட்ரிக் தொன்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆண்டுகளில் மிகை அரிசி உற்பத்தி காணப்பட்டிருப்பின், அதன் அளவு ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி ஆண்டுகளில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1184/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயற் காணிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்கள் என்பதையும் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக என்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் நெற் பயிர்ச்செய்கையிலிருந்து விலகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் நெல் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உரத்திற்கான தேவைப்பாடு ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1189/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) “தாமரை கோபுரம்” கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1192/2022

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2021 சனவரி மாதம் தொடக்கம் 2022 சனவரி வரையான காலப்பகுதிக்காக நீதி அமைச்சிற்கு கட்டடமொன்றை வாடகைக்குப் பெறுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டடம் அமைந்துள்ள இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை வாடகைக்குப் பெறுவதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தருணத்தில், இவ்வாறு கட்டடங்களை வாடகைக்குப் பெறுதல் பொருத்தமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1196/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண, வகவத்தை டயர் தொழிற்சாலை நிர்மாணக் கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பானது எத்தனை மெகாவாட் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1318/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(ii) மேற்படி விபத்துக்களின் காரணமாக மரணித்த நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி விபத்துக்களின் காரணமாக சேதமடைந்துள்ள சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1319/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது உற்பத்தி நடவடிக்கை களுக்காக கைத்தொழிலாளர்களுக்கு செப்பு வழங்குகின்றதா;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் ஒவ்வொரு ஆண்டிலும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள செப்பின் அளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய இன்ஷாப் அஹமட் என்பவருக்குச் சொந்தமான கம்பனிக்கு செப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள செப்பின் அளவு யாது;

(iii) இந்த செப்பினைக் கொண்டு மேற்படி கம்பனி மேற்கொண்டுள்ள உற்பத்திகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1320/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரத்தினக்கல் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் இனங்காணப்பட்டுள்ள இரத்தினக்கல் கைத்தொழிலுக்குப் பொருத்தமான நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(iii) இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இக்கைத்தொழில் மூலம் இலங்கை ஆண்டொன்றில் ஈட்டுகின்ற ஏற்றுமதி வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1467/2022

கௌரவ ரோஹண பண்டார,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அனுராதபுர நகர எல்லைக்குள் பல சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புக்களைத் தடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1477/2022

கௌரவ ரோஹண பண்டார,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்திற்குரிய உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் இன்றளவில் அமய, பதிலீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவ் ஊழியர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1478/2022

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள புனிதத்தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி புனிதத்தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி புனிதத்தளங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(iv) மத்திய கலாசார நிதியத்தினால் நிருவகிக்கப்படுகின்ற புனிதத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்ற முறையில் ஏனைய பௌத்த புனிதத்தளங்களையும் அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1733/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனியினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைகள்/ சஞ்சிகைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் ஒவ்வோர் ஆண்டிலும் அந்நிறுவனத்தின் இலாபம்/நட்டம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுதந்திரமான ஊடகக் கலையை ஏற்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனியைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் விதம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1736/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி ஒவ்வொரு பண்ணையிலும் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் மற்றும் மேற்படி ஒவ்வொரு வகைகளும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி பண்ணைகளை மேற்கொண்டும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1737/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் கால்நடைகள் சார்ந்த நோயொன்று இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பதிவாகின்றது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இன்றளவில் இந்நோய்க்கு ஆளாகியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1948/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனை, கன்னொருவ பிரதேசத்தில் மகாவலி கங்கையின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள சங்கிலிப் பாலத்திற்கு அருகில் பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு நேரெதிர் திசையை நோக்கியதாக மகாவலி கங்கையின் எல்லையில் சட்டவிரோதமாக ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்பைத் தடுப்பதற்கு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி அனிவத்த பிரதேசத்தில் தொடங்வல புதிய பாலத்திற்கு இடது புறத்தில் அமைந்துள்ள (அனிவத்தையிலிருந்து ஹல்ஒலுவ வீதிக்கு பிரவேசிக்கும் இடத்தில்) மகாவலி கங்கையின் ஒதுக்குப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்புகள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சட்டவிரோத நிர்மாணிப்புகளைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1960/2022

கௌரவ காமினி வலேபொட,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1995/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஆட்சிக் காலத்தில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கூட்ட அறிக்கைகள் முறையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக அரசாங்க நிதி மோசடி செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக அரசாங்க நிதி மோசடி செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரமின்றி அந்த நிதியத்துடன் தொடர்பு இல்லாத உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதனூடாக மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2040/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் போக்குவரத்து பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2059/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2071/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினதும் லக்ஹண்ட வானொலி சேவையினதும் புதிய சின்னங்களை ஊக்குவிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் லக்ஹண்ட வானொலி சேவைக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(ii) அந்த ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட ஏனைய வசதிகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை;

யாதென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட ஆலோசகர்கள் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கும், லக்ஹண்ட வானொலி சேவைக்கும் வழங்கிய சேவை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2114/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) சபையில் இன்றளவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளில் தற்போது அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் மூலமாக ஆரம்பத்திலிருந்து இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் மற்றும் மேற்படி பேருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானம் மற்றும் செலவினம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2688/2022

கௌரவ ஜே. சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கிராமிய மக்களுடைய போக்குவரத்து வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன், அப்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கிராமிய மட்டத்தில் பாலங்களை அமைக்கும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை, வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் தற்போதைய முன்னேற்றம் என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்தில் பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டிருப்பின், அந்த ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை மற்றும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2768/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்;

(ii) அத்தகைய ஒவ்வொரு வழிமுறைக்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள் தனித்தனியாகவும்;

(iii) 2015 ஆம் ஆண்டின் பின்னர், 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய மேல் மாகாணத்தின் உள்ளூரதிகார சபைகளில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறை;

(iv) அதற்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய, 2004 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வருமானப் பரிசோதகர்களின் சம்பளங்களில் குறைப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2971/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாத்தண்டிய, இரணவில கிராமத்தில் வாழ்கின்ற மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கிராம மக்கள் பயன்படுத்தும் மீன்பிடிப் படகுத்துறை இன்றளவில் கடுமையாக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இக்கிராமத்தவர்கள் எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3077/2022

கௌரவ அசோக்க பிரியந்த,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழுள்ள சகல நிறுவனங்களிலும் தற்போது ஒப்பந்த மற்றும் அமய அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3086/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகரையும் கல்லோயா குடியிருப்பையும் இணைக்கும் கிட்டங்கி ஆற்றின் குறுக்காக அமைந்துள்ள பிரதான வீதி பருவ மழைகாலத்தில் ஐந்து அடிகளுக்கு மேல் நீரில் மூழ்குவதன் காரணமாக அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி வீதியினூடாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பெருமளவிலான மக்கள் பயணிக்கின்றனர் என்பதையும்;

(iii) கிட்டங்கி ஆற்றின் குறுக்காக பாலமொன்று நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அவ் வீதியை பயன்படுத்தியபோது விபத்துக்களுக்கு உள்ளானதன் விளைவாக பலர் மரணித்துள்ளதோடு சொத்துக்களும் அழிவடைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் கிட்டங்கி ஆற்றின் குறுக்கே இதுவரை பாலமொன்று நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3156/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு 200 புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) 2018.10.27 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு சுமார் 10,000 விண்ணப்பதாரிகள் தோற்றியதாகவும்;

(iii) ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக ரூ. 750 அறவிடப்பட்டது என்பதையும்;

(iv) பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 408 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்;

(v) நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 விண்ணப்பதாரிகளின் பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள போதிலும் இது வரையில் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(vi) மேற்குறித்த ஆட்சேர்ப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு தற்போது 2 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளதுடன் ஆட்சேர்ப்புத் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த புலனாய்வு உத்தியோகத்தர்கள் விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3157/2022

கௌரவ உதயன கிரிந்திகொட,— தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு மத்தியில் இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இலங்கையரொருவர் வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெறுகையில் இலங்கை அரசாங்கத்தை விழிப்பூட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெளிநாட்டுப் பிரசாவுரிமையை மாத்திரம் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3174/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையானது பன்னிரண்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய போதிலும், இச்சங்கத்தின் அதிகாரத்தை பணிப்பாளர் சபையின் மூன்று உறுப்பினர்கள் பலவந்தமாக கைப்பற்றியுள்ளரென்பதையும்;

(ii) தங்காலை பிரதேச செயலகத்தில் இணைந்து கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் இதில் தொடர்புபட்டிருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் (தென் மாகாணம்) இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பணத்திற்கு பொறுப்புக்கூறும் தரப்பினர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3189/2022

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழுகின்ற மக்களுக்கு மத்தியில் தற்போதைய அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

(iii) மேற்படி காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான நோக்கங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகள் பலவந்தமாக கையகப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளையும்;

(iii) ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக புதிய முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், மேற்படி முறைமையின் விபரங்களையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2022 யூலை 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2784/2022

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நாடெங்கிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்கள் மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுச் செயன்முறையின் கீழ் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றுகின்ற அதிபர்கள் நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்ற போதிலும் தற்பொழுது இவர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அதிபர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2838/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் திகதியையும்;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2972/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சைப்ரஸ் குடியரசில் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை கொன்சியுலர் ஜெனரல் அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலகம் மூடப்பட்டதன் காரணமாக சைப்ரஸ் குடியரசில் பணிபுரியும் இலங்கை ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு கடும் தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3078/2022

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிலையங்களில் நடாத்தப்படும் தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iv) புத்தளம் மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3085/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்திலுள்ள —

(i) வீடுகள் தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியின் கீழ் தனியார் காணிகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(iii) மாதிரிக் கிராமங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்கான மிகுதி நிதித் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அத் திட்டம் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3155/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவிநிலை தாதி திருமதி வசந்தா மல்லவஆராச்சி அவர்கள் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றி 1985.04.01 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார் என்பதையும்;

(ii) ஓய்வூதிய சுற்றறிக்கை 2/2012 இற்கு அமைவாக தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக 2012.12.18ஆம் திகதி விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்குச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iii) அவ்விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை வைத்தியசாலைப் பணிப்பாளரின் இலக்கம் EBB/PP/ෆෙදි/ඊ.ඕ. மற்றும் 2013.01.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பாணந்துறை பிரதேச செயலகத்தில் இருந்த ஓய்வூதியக் கோப்பு, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(v) அப்பெண்மணி 2017.12.20 ஆம் திகதி இறந்ததன் பின்னர் அவருடைய கணவன் திரு. தயாபால ஹல்பே கமகே அவர்கள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆவணங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்துள்ள போதிலும் இதுவரை அது கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இழைக்கப்பட்ட தவறு காரணமாக திருமதி வசந்தாவின் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைச் செலுத்தாமை தவறு என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ் ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3158/2022

கௌரவ உதயன கிரிந்திகொட,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச அலுவலர்களுக்கும் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர் களுக்கும் தீர்வையற்ற சலுகையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரிமப்பத்திரங்கள் வழங்கப்படுவது ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) 2001 ஆம் ஆண்டு முதல் இதுவரை அரச அலுவலர்களுக்கு மேற்படி உரிமப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி உரிமப்பத்திரங்களுக்கான உரித்தினைக்கொண்ட அரச சேவைகள் மற்றும் பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி பதவிகளை வகிக்கும் அலுவலர்களுக்கு குறித்த உரிமப்பத்திரங்களை வழங்கும் போது கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி உரிமப்பத்திரங்கள் எவ்வளவு காலத்திற்கொரு தடவை வழங்கப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உரிமப்பத்திரங்கள் வழங்கப்படுவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உரிமப்பத்திரங்கள் மீண்டும் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச அலுவலர்களுக்கு மேற்படி உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனால் கடந்த 20 வருட காலப்பகுதியில் அரசாங்கம் இழந்துள்ள வரித்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு கடமை நடவடிக்கைகளுக்கென அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3175/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணசபை பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3293/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமய அடிப்படையில் அதிகளவான தொழிலாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிலாளர்களில் இன்றளவில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிலாளர்கள் இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3337/2022

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் நகரில் தொழில்நுட்பக் கல்லூரியொன்றைத் தாபிக்குமாறு என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரியைத் தாபிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கப்படும் என்பதையும்;

(iii) அங்கு தமிழ் மொழியில் பாடநெறிகளை நடாத்தத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூலை 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கென கொள்ளப்படுகின்ற காணிகளுக்காகச் செலுத்தவேண்டிய இழப்பீடுகளையும் பிற நிருவாகச் செலவுகளையும் உரிய நிறுவனம் ஏற்க வேண்டும் என்பதையும்;

(ii) ஆயினும், அந் நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதி அக்கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச் சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் செய்வதற்கான வழிமுறை;

(ii) அதற்கு ஏற்புடைய சட்டம்;

என்பன யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமை மாற்றல் சான்றிதழ் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு காணி அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு பணிப்புரை வழங்குவதானது மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள், காணிக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், இந்த நிலைமையைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

46/2022

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரத்தியேக வகுப்புகளை நடத்திவருகின்ற நிறுவனங்களின் தரநியமங்களை ஒழுங்குறுத்துவதற்கான ஓர் அரச நிறுவனம் உண்டா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) அதன் பணிப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய ஒரு நிறுவனம் தாபிக்கப்படவில்லையெனின், அதற்கென ஒரு நிறுவனத்தைத் தாபிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

252/2022

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "தாமரைக் கோபுரம்" கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(v) "தாமரைக் கோபுரத்தை" பொது மக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "தாமரைக் கோபுரம்" கருத்திட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி கருத்திட்டத்தை எவ்வகையில் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

572/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படுவதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில், அத்தகைய விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்களும், அவற்றுக்கு தமது உற்பத்திகளை வழங்கும் விவசாயிகளும் மிகவும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி பொருளாதார மத்திய நிலையங்களுக்கு உற்பத்திகளை வழங்கிவரும் விவசாயிகளை வலுவூட்ட எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1025/2022

கௌரவ சாந்த பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூட்டுறவு கிராமிய வங்கி முறைமையின் மூலம் கிராம மக்களுக்கு பாரிய சேவை ஆற்றப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் காணப்படும் கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) கூட்டுறவு கிராமிய வங்கிகளினால் இன்றளவில் அமுல்படுத்தப்படும் கடன் திட்டங்கள் யாவை;

(iii) கூட்டுறவு கிராமிய வங்கி முறைமையில் இன்றளவில் வைப்பிலிடப்பட்டுள்ள மொத்த பணத்தொகை யாது;

(iv) மேற்படி வைப்புப்பணம் மீள்வைப்பிலிடப்பட்டிருப்பது அரச வங்கிகளிலா அல்லது தனியார் வங்கிகளிலா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கூட்டுறவு பொது நிதியத்தில் உள்ள பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகை முதலீடு செய்யப்படும் விதம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1182/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சேவையாற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையினர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனைத் தயாரிக்கும் திகதி மற்றும் விதம் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சிலரின் ஓய்வூதியத்தை கணக்கிடுகையில் அவர்கள் விவசாய ஊக்குவிப்பாளர் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக சேவையாற்றிய காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு மேற்படி சேவை காலப்பகுதி எவ்வாறு எத்திகதியில் வழங்கப்படுமென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1197/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1321/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பெட்டிகலோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட்" என்ற பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பெயரில் பல்கலைக்கழகமொன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) இப்பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கு நிதி பெறப்பட்ட முறை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தைப் பேணிவருவதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு மாணவரிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூலை 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1479/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலென்பிந்துனுவெவ பிரதேசத்தின் கெட்டலாவ, துட்டுவெவ, திசாவெவ மற்றும் மயில்கஸ்வெவ ஆகிய பிரதேசங்களில் பாரிய அளவில் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) வெங்காயத்திற்கு உரிய விலை கிடைக்காத காரணத்தினால் வெங்காயம் அதிகளவில் தற்போது விவசாயிகளின் வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வெங்காயத்தினை விற்பனை செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1738/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாரிய அரிசி ஆலைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளரதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இன்றளவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1949/2022

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி குட் ஷெட் பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அப்பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) குட் ஷெட் பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு ஒருங்கமைவாக கண்டி புகையிரத நிலையமும் நவீனமயப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி தீயணைப்புப் படை தலைமையகத்திற்கு அருகாமையில் சுரங்கப் பாதையொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அச்சுரங்கப் பாதையை அமைப்பதற்குரியதாக சுற்றாடல் அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அது தொடர்பாக கிரய-நலன் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1961/2022

கௌரவ காமினி வலேபொட,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நீர்ப்பாசனம் மற்றும் நீரக வளமூலங்கள் முகாமைத்துவ விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1996/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு குழு செயலகம் சட்டபூர்வமானதொரு நிறுவனமா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசியலமைப்பின் பிரகாரம் அவ்வாறானதொரு நிறுவனத்தை தாபிப்பதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(v) மேற்படி குழுவின் கட்டமைப்பு மற்றும் அமைப்பு என்பன யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அச் செலவுகளை ஏற்றுள்ள பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அலுவலகத்திற்காக அரசாங்கத்தின் நிதியை செலவிட முடியுமா என்பதையும்;

(v) இன்றேல், மேற்படி நிதியை செலவிடுவதற்கு அங்கீகாரம் அளித்ததன் மூலம் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற் குறிப்பிட்ட அலுவலகத்துக்கென நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஊழல் ஒழிப்பு குழுவின் அங்கத்தவர்களுக்கு ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அத் தொகை மீள அறவிடப்படுமா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2006/2022

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2014/2022

கௌரவ கே. பீ. எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 - 2019 ஆம் ஆண்டு வரை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களது பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியில் குறித்த நிறுவனத்தின் தொழிற்பாட்டுப் பணிப்பாளராகப் பணியாற்றியவரின் பெயர் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்பாட்டுப் பணிப்பாளருடன் தொடர்புடைய தனியார் நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட "*ஒவர் சோல்டர்ஸ்", "மஹாரச்சார்ய யௌவனய", சஞ்சாரே*" ஆகிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட "சவனக் ரெஸ்" நிகழ்ச்சியினை ஒளிபரப்புவதற்குப் பதிலாக மேற்படி நிறுவனத்தின் அப்போதைய தலைவரின் சகோதரருடன் தொடர்புடைய நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட "தம்பதிவ" நிகழ்ச்சியினை ஒளிபரப்புவற்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறித்த முறைகேடான கொடுக்கல் வாங்கல்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து மேற்படி பணத் தொகை அறவிடப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025/2022

கௌரவ மதுர விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2042/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2045/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் வருகின்ற குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் புனரமைக்கப்பட வேண்டுமென தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் 2020 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 2021 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2022 யூலை 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2061/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உயர் கல்வி விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2073/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2097/2022

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு பீ/17 இல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் பயிர்ச்செய்கைகள் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் அழிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்வதை விரும்வில்லை என்பதையும்;

(iii) பிரதேசத்தின் யானை வேலிகள் காட்டு யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) யானை வேலியை அமைத்துத் தருமாறு உரிய உத்தியோகத்தர்களிடம் கோரியபோதிலும், இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) இதன் காரணமாக இம்மக்களுக்கு தமது பிரதேசங்களை விட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2115/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுர மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளில் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திற்கமைவாக —

(i) அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(ii) தற்போது சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

தனித்தனியாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2262/2022

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு -

(i) இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2458/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு இலட்சம் கிலோமீற்றர்களை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்சமயம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) வீதி அபிவிருத்தியின்போது பெரும்பான்மையான வீதிகளின் இருமருங்கிலுமுள்ள வடிகான்களை அபிவிருத்தி செய்யாமை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) வீதி அபிவிருத்திக்காக செலவின மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது இவ்விடயம் பற்றி கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2468/2022

கௌரவ றோஹண திஸாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனிக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுள் தற்போது இயங்கு நிலையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் இயங்காத நிலையிலுள்ள தொழிற்சாலைகள் பெயர் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) தொழிற்சாலைகள் இயங்கு நிலையில் இல்லாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) தற்போது இயங்காதிருக்கும் தேயிலைத் தொழிற்சாலைகளைப் பயன்படுத்தி தேயிலை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியானது அதன் தேயிலைத் தொழிற்சாலைகளை தனியார் துறையினரிடம் ஒப்படைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2573/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மை விகிதமானது ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித் தனியே யாதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மையை இல்லாதொழிப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2580/2022

கௌரவ பீ.வை. ஜீ. ரத்னசேக்கர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் இன்றளவில் அத்தியாவசியப் பொருட்களாக அறிவிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) வர்த்தகர்கள் இன்றளவில் பெரும்பாலான பொருட்களின் விலைகளை எவ்வித கட்டுப்பாடும் இன்றி தான்தோன்றித்தனமாக அதிகரித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பொருட்களின் சந்தை விலையைக் கட்டுப்படுத்துவதற்கென அதிகாரசபை இன்றளவில் கடைப்பிடித்து வருகின்ற முறையியல் யாது என்பதையும்;

(ii) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் ஏற்புடைய சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாததை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கான ஏதுக்கள் யாவை என்பதையும்;

(iv) சந்தைச் சக்திகளின் அடிப்படையில் சந்தையில் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2635/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு டொலர் கிடைக்கும் முறைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கை டொலர் தொடர்பான பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?